RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1723

OPEN ACCESS

# சிலப்பதிகார வேட்டுவ வரியில் இனக்குழுச் சமுதாய எச்சங்கள்

மு. சங்கர் [அ, *]

[அ] தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626130, தமிழ்நாடு, இந்தியா

# The Remnants of the Ethnic Community in the Silappathikara Vettuva Vari (Hunting Chapter)

**M. Sankar** [a, *]

[a] Department of Tamil Studies, Sri Kaliswari College (Autonomous), Sivakasi – 6262130, Tamil Nadu, India

* Corresponding Author: sankartamilskcgri@gmail.com

Received: 25-03-2022
Revised: 11-10-2022
Accepted: 30-10-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Silappathikaram, the first epic that appeared in Tamil, contains relics of ethnic life. The purpose of this article is to bring them out. Silappathikaram also highlights the life of the ethnic people in the midst of the chapters that speak of the greatness of the Moovendars (Three Kings). In this way, in the Vettuva vari of the Madurai Chapter, one can see that the life of the Eyinars and their worship are explained. In the worship of Kottravai, they gave her the symbols of their race as her weapons. These can be seen to illustrate their life. The lyrics sung in this worship form the collective mantra. It is also based on the belief that collective worship accomplishes everything. Because of their victory in the battle to attract the enemy, they give a gift of blood to Kottravai. This is an expression of extreme devotional consciousness. This article is written with the aim of examining how ethnic life is thus represented by living beings.

**Keywords:** Silappathikaram, Veettuva Vari, Ethnic Community, Kottravai Worship.

## முன்னுரை

தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரம் ஒரு மாறுதல் நிலையைக் குறிக்கும் காப்பியமாகும். அது இனக்குழு வாழ்க்கை அழிந்து வணிகக்குடிகள் மேன்மையடையும் காலகட்டத்தைக் குறிக்கின்றது. இவ்வாறு சிலப்பதிகாரம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமுதாய வாழ்வியலைக் காட்டுவனவாய் அமைந்துள்ளது. குறிப்பாகக் கானல் வரி - நெய்தல் நிலத்தின் இயல்பையும் நாடுகாண் காதை - மருத நிலத்தின் இயல்பையும் வேட்டுவ வரி - பாலை நிலத்தின் இயல்பையும் ஆய்ச்சியர் குரவை - முல்லை நிலத்தின் இயல்பையும் குன்றக் குரவை - குறிஞ்சி நிலத்தின் இயல்பையும் காட்டுவனவாக உள்ளன. இவை பல்வேறு நிலைகளில் ஒன்றுக்கொன்று முரணான இயல்பை உடையனவாய்க் காணப்படுகின்றன. இவ்வாறு ஐவகைச் சமுதாயத்தின் தன்மைகளையும் இயல்புகளையும் தன்னகத்தே கொண்ட காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார் இளங்கோ.

இனக்குழு வாழ்க்கை முறை அழிந்து நிலவுடைச் சமுதாயம் மலரும் காலத்தில் முன்னைய சமுதாயத்தின் எச்சங்கள் இருப்பது இயல்பு. இனக்குழு அழிவு முழுமையாக இல்லாமல் அரைகுறையாக இருந்தால் இனக்குழு மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள் போன்ற பண்பாட்டு எச்சங்கள் அடுத்தடுத்து உருவாகும் சமுதாயத்தில் காணப்படுவது இயற்கை. இந்நிலையைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

இனக்குழுச் சமுதாயத்தின் அழிவுநிலை பற்றிப் பேராசிரியர் கா.சுப்பிரமணியன் கூறுகையில், “உணவு சேகரித்தலும் வேட்டையாடுதலும் முதலில் உலகெங்கும் நிலவிற்று. ஆனால், அதைத் தொடர்ந்த மாறுதல்கள் அந்தந்தச் சூழ்நிலையைப் பொறுத்தாயிற்று. சில இடங்களில் கால்நடைப் பொருளாதாரத்திற்கும் விவசாயப் பொருளாதாரத்திற்கும் மாறினர். இவற்றின் முன்னேற்றம் இனக்குழுமுறை சிதைய வழி செய்தன. இவ்விரு வழிகளும் மக்களை நாகரிகத்திற்கு இட்டுச் சென்றன” என்கின்றார் (Subramanyan, 2017).

## மன்றம்

இனக்குழுச் சமுதாயத்தில் மன்றம் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. இது இனக்குழு வாழ்க்கையின் அடையாளமாகவும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடமாகவும் இருந்துள்ளது. இங்கு ஊர்ப்பொது நிகழ்வுகள் அனைத்தும் நடத்தப்பட்டுள்ளன. எனவேதான், சாலினிக்குக் கொற்றவை கோலம் புனைந்து ஊர்ப்பொது மன்றத்தில் வைத்து வழிபாடு நிகழ்த்துகின்றனர். இம்மன்றம் இனக்குழு வாழ்க்கையின் அடையாளமாக இருந்தது என்பது பற்றி ந.சுப்பிரமண்யன் கருத்துரைக்கையில், “வேடர்களாகிய எயினர்கள் கிராமத்து மன்றங்களில் அவர்கள் பெயர்த்து வந்த மாடுகளைக் கட்டி வைத்தனர்” (Subramanyan, 2017).

## கூட்டுழைப்பும் கூட்டுண்ணுதலும்

சிலப்பதிகார வேட்டுவ வரியில், “இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும் நடுவூர் மன்றத் தடிபெயர்ந்தாடிக் கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன” (சிலம்பு.12:10-12) எனவரும் அடிகளில் இனக்குழுச் சமுதாயத்தின் தலையாயப் பண்புகளுள் ஒன்றான பொதுவில் வைத்து உண்ணுதைக் காணமுடிகின்றது. கூட்டுண்ணுதலைப் போலவே, உழைப்பும் அனைவருக்கும் பொதுவாய் இருந்துள்ளது என்பதைக் காணமுடிகின்றது. இங்கு எயினர் தம் கூட்டுழைப்பின் விளைவாகக் கிடைத்த பொருள்களையெல்லாம் மன்றத்தில் பங்கிட்டுக் கொண்டனர் என்பதை அறிய நேர்கின்றது. இது அவர்தம் பொதுவுடைமைச் சிந்தனையைக் காட்டுகின்றது. இனக்குழுச் சமுதாயத்தில் தனித்த சொத்துடைமை கிடையாது. அச்சமுதாயத்தில் சமூகத் தலைவன் மட்டுமே உண்டு. அரசுருவாக்கக் காலகட்டத்தில் அவனே மன்னன் என்ற நிலைக்கு உயர்கின்றான். பிறகு அம்மன்னனே அச்சமூகத்தின் தலைவனாகி விடுகின்றான். இப்போது வேந்தனுக்குக் கூலிப்படையாளியாக இருக்கின்றான். பிற நாட்டை வென்றவுடன் கிடைக்கும் பொருட்களை ஊராருக்கும் கலைஞர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் செயலில் ஈடுபடுகின்றான்.

## கவராடலும் பகிர்ந்தளித்தலும்

எயினரது இனக்குழு வாழ்க்கையில் கவராடல் என்ற தொழில் இன்றிமையா இடத்தைப் பெறுகின்றது. இவர்கள் கூட்டாகச் சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வந்துள்ளனர். இதனை,

“தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆனிரைகள்”

“கரந்தை யலறக் கவர்ந்த இனநிரைகள்”

“அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்”

என்ற அடிகளில் காணலாம் (Venkatacalam, 2007).

இவ்வாறு கவர்ந்து வந்த ஆநிரைகளை எயினர்கள் யாவருக்கும் பகிர்ந்ததளித்ததைச் சிலப்பதிகாரம் இயம்புகின்றது. அஃதாவது, கொல்லன், துடியன், பாணர், கள்விலையாட்டி, ஒற்றன், நிமித்திகன், முதிர்ந்த எயினர், எயிற்றியர் உள்ளிட்டோருக்குக் கவர்ந்த பொருட்கள் பகிர்ந்து வழங்கப்பட்டன.

“கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல

நல்லியாழ்ப் பாணர்”

“கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்

புன்வாய்ப்புச் சொன்னகணி”

“நயனில் மொழியின் நரைமுடி தாடி

எயினர் எயிற்றியர்”

எனவரும் அடிகளில் ஆநிரைக் கவர்ந்து வர உதவியவர்கள் அனைவருக்கும் சிறப்புச் செய்யும் பொருட்டுக் கொற்றவையின் முன்றிலில் கூடியிருந்தனர் என்பதை அறியலாம் (Venkatacalam, 2007).

## கொற்றவை வழிபாடு

எயினரின் இனக்குழுச் சமுதாயத்தில் கொற்றவை வழிபாடு பெருவழக்குடைய முனைப்பான வழிபாடாக இருந்துள்ளது. இவ்வழிபாடு மிகத் தொன்மையானது. சிலப்பதிகாரத்தில் காணலாகும் கொற்றவை வழிபாடு பழைய சடங்கின் எச்சமாகவே உள்ளது. அத்தோடு காலப்போக்கில் ஏற்பட்ட சமய வளர்ச்சியின் பாதிப்புகளும் விரவியுள்ளது.

கொற்றவைக்குப் பூசை செய்யும்போது கொற்றவையின் வடிவமாக எயினர் இனத்தைச் சேர்ந்த சாலினியே இருக்கின்றாள். அவளுக்குச்

“சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்

குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி

இளைசூழ் படப்பை இழுக்கிய வேனத்து

வளைவெண் கோடு பறித்து மற்றது

முளைவெண் திங்க ளென்னச் சாத்தி

மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற

மாலை வெண்பல் தாலிநிரை பூட்டி

வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்து

உரிவை மேகலை உடீஇப் பரிவொடு

கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்

திரிதரு கோட்டுக் கலைமே லேற்றி”

உள்ளிட்ட பல்வேறு அணிகலன்களை அணிவித்தனர் (Venkatacalam, 2007). இவையாவும் ஆற்றல் மிக்கவை. இவற்றை அணிந்திருப்பவர்களுக்கு மூர்க்கக்குணம் மிக்க விலங்குகளின் ஆற்றல் வந்து சேரும் எனும் நம்பிக்கை அடிப்படையில் அணிவிக்கப்பட்டுள்ளன.

தொல்குடிச் சமூகத்தில் தேவராட்டி புகழ் பெற்றவளாக இருந்தாள். சிலப்பதிகாரத்தில் வரும் சாலினி கொற்றவை வழிபாட்டை நிகழ்த்துபவளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள். இது தாய்வழிச் சமுதாயத்தின் எச்சமாகும். இதனை,

“பாய்கலைப் பாவை அணிகொண்டு நின்றவிவ்

வாய்தொடி நல்லாள் தவமென்னை கொல்லோ

ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த

வேய்வில் எயினர் குலனே குலனும்”

என்ற அடிகள் உறுதி செய்யும் (Venkatacalam, 2007).

கொற்றவை பூசை செய்யும்போது கொற்றவையின் வடிவமாக அமரும் சாலினிக்கு முன்பு பின்வரும் பொருட்களை வைத்து வழிபடுகின்றனர்.

“பாவையுங் கிளியுந் தூவி அஞ்சிறைக்

கானக் கோழியும் நீனிற மஞ்ஞையும்

பந்தும் கழங்குந் தந்தனர் பரசி

வண்ணமுஞ் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்

புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்

பூவும் புகையும் மேவிய விரையும்

ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின்வர

விலைப்பலி உண்ணும் மலர்ப்பலி பீடிகைக்

கலைப்பரி ஊர்தியைக் கைதொழு தேத்தி”

இதன் மூலம் அக்காலச் சமயம் என்பது வழிபடுவோரையும் வழிபடு பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டு தொடர்வதாகும் என்பதை உய்த்துணரலாம் (Venkatacalam, 2007). கொற்றவையின் ஊர்தியாகக் கலைமான் கருதப்படுகின்றது. இது வீரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது போலும். எயினர்கள் தங்கள் குலதெய்வமாகக் கொற்றவையைக் கருதினர். எனவேதான், வேட்டுவ வரியில் வெட்சி மலரைச் சூடி போர் வீரர்கள் ஆநிரைகளைக் கவரச் செல்லும் போது, கொற்றவையும் உடன் செல்வாள் என்றும் காரியென்னும் பறவை அப்போது சகுனம் சொல்லும் என்றும் கூறியிருப்பதால் இது புலனாகும் (Samy, 2011). இதனை,

“உட்குடைச் சீறூ ரொருமகன்ஆ னிரைகொள்ள உற்ற காலை

வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்

வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்க்

கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்”

எனவரும் அடிகள் வழி உறுதி செய்யலாம் (Venkatacalam, 2007).

மேற்கூறியவற்றில் இருந்து எயினர் சமுதாயத்தில் தாய்வழியே நிலவியது என்பதையும் கொற்றவையே அவர்களது தெய்வமாக வழிபடப்பட்டாள் என்பதையும் எயினர் சமுதாயத்தைப் பொறுத்தவரை உற்பத்தி என்பதற்கு இடமில்லை எனவே, அவர்கள் வழிப்பறியின் மூலம் கிடைக்கும் பொருட்களையே நம்பியிருந்தனர். அவ்வாறு கிடைக்கும் பொருட்களைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

## வளச்சடங்கு

எயினர் இனக்குழுச் சமுதாயத்தில் மந்திரச் சடங்குகளை நிகழ்த்துபவளாகச் சாலினி என்ற குமரிப்பெண் இருக்கின்றாள் (Venkatacalam, 2007). அவளே குறிசொல்பவளாக இருக்கின்றாள். எனவேதான் கண்ணகி அங்கிருக்கும்போது,

“இணைமலர்ச் சீறடி இணைந்தனள் வருந்திக்

கணவனோ டிருந்த மணமலி கூந்தலை

இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி

தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து

ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய

திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்

பேதுறவு மொழிந்தனள்" (Venkatacalam, 2007)

எயினர் இன மக்களின் வரிப்பாடல் புராணக்கதையை அடிப்படையாகக் கொண்டது. இதில் எயினர் ஆடிப்பாடுவது ஒத்த மந்திரமாகக் கருதப்பட்டது (Subramanyan, 2011).

"அமரி குமரி கவுரி சமரி

சூலி நீலி மாலவற் கிளங்கிளை

ஐயை செய்யவள் வெய்யவள் தடக்கை" (சிலம்பு.12:67-69)

இவ்வாறு வேட்டுவ வரியில், கொற்றவை வழிபாட்டோடு வேட்டுவர் இனத்தாரின் ஆநிரை கவர்தலும் அதனோடு தொடர்புடைய செய்திகளும் பாவனை செய்யப்பட்டுள்ளன எனலாம்.

## குருதிக் கொடை

எயினர் ஆநிரை கவரும் போரில் வெற்றி பெற்றமையால் கொற்றவைக்குக் குருதியைப் பலியாகக் கொடுக்கின்றனர். இதனை,

"அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது

மிடறுகு குருதிகொள் விறல்தரு விலையே

நிணனுகு குருதிகொள் நிகரடு விலையே

என்ற அடிகள் வழி அறியலாம்" (Venkatacalam, 2007).

போர்க்களத்தில் கிடைத்த வெற்றி நிலைக்க வேண்டும் என்பதற்காக வீரர்கள் தம் மிடற்றை அறுத்துக் கொற்றவைக்குப் பலி தந்துள்ளனர். இப்பலியினால் கிடைக்கும் ஆற்றல் எயினரினத்திற்குச் சென்றடையும் என்ற நம்பிக்கையினால் இஃது நடத்தப்பட்டுள்ளது.

## வெட்சிப் போர்

"வெட்சிக்கு இலக்கணம் தரும் தொல்காப்பியர்,

வேந்து விடுமுனைஞர் வேற்றுப்புலக் களவின்"

ஆதந்து ஓம்பல் மேவற் றாகும் (தொல்.1003) என்கின்றார் (Subramaṇiyan, 2009). இது வேந்தர்களின் போர் வீரர்கள் ஆநிரை கவரும் போரில் ஈடுபட்டிருந்தனர் என்பதைத் தெளிவாக்கும். ஆனால், வேட்டுவ வரியில் சுட்டப்பெறும் மறவர்கள் வேந்தரின் ஏவலின்றித் தாமே சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வரும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

"உட்குடைச் சீறூ ரொருமகன்ஆ னிரைகொள்ள உற்ற காலை

வெட்சி மலர்புனைய"

எனவரும் அடியில் சீறூரில் உள்ள வீரன் ஒருவன் ஆநிரைகளைக் கவர்ந்து வந்த செய்தி பதிவாகியுள்ளது (Venkatacalam, 2007). இது பற்றிப் பேராசிரியர் பெ.மாதையனின் கருத்து நினைவுகூரத்தக்கது.

"வெட்சித்திணையில் இடம்பெறும் துறைகளும் இது தனித்ததோர் போர்முறையே அன்றிப் போர் தொடங்குதற்கான அறிகுறி அன்று என்பதைக் காட்டுகின்றன. வெட்சியில் பாதீடு எனும் ஒரு துறை உண்டு. கவர்ந்து வந்த ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொள்ளுதலைக் கூறுவதே இத்துறையின்

பாடுபொருள்” (Maathaiyan, 2012). எனவே, அநிரை கவர்தலைப் போரின் தொடக்கமாகக் கொள்ளமுடியாது என்பது புலனாகும்.

கொற்றவையைப் புகழ்ந்து பாடும் இவ்வரிப்பாடலில் பாண்டிய மன்னன் வெட்சி சூடுபவனாகக் காட்டுகின்றார். இதனை, “வெட்சி சூடுக விறல்வெய் யோனே” (சிலம்பு.12:23.4) என வரும் அடியின் மூலம் அறியலாம். ஆநிரை கவரும் போரில் தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்றும் கரந்தையார் தொழில் பாழ்பட வேண்டும் என்றும் எயினர் வேண்டுவதைக் காணலாம். இதில் இனக்குழுத் தலைவன் வேந்தன் பொருட்டுச் செயலாற்றுவதைக் காணமுடிகின்றது. இஃது இனக்குழுச் சமுதாயம் படிப்படியாக அழிந்து பாண்டியர் குலம் செங்கோலோச்சிய நிலையையே காட்டுகின்றது.

## முடிவுரை

இனக்குழு வாழ்க்கை அழிந்து வணிகக்குடிகள் மேன்மையடையும் காலகட்டத்தைச் சேர்ந்த நூலாகச் சிலப்பதிகாரம் படைக்கப்பட்டுள்ளது. இதில் பாலை நிலத்தில் வாழும் எயினர் தம் வாழ்வியலை எடுத்துக்காட்டும் காதையாக வேட்டுவ வரி அமைந்துள்ளது. இவர்கள் கூட்டுழைப்பில் ஈடுபட்டிருந்தனர். அதன்மூலம் கிடைத்த பொருட்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டுள்ளனர். இவர்கள் வாழும் நிலப்பகுதியில் எதுவும் விளைவித்து, உண்ண இயலாத காரணத்தால் அவ்வழிப்போகும் ஆட்களைத் தாக்கி, அவர்தம் பொருட்களைக் கவர்ந்து வந்தே தமது வாழ்க்கை நடத்தியுள்ளனர் என்பது தெரியவருகின்றது. மேலும், இம்மக்கள் அருகே இருக்கும் ஊரில் சென்று, அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வந்துள்ளனர். அவ்வாறு கவர்ந்து வந்த ஆநிரைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டுள்ளனர். ஆநிரைக் கவரும் போரில் தங்களுக்குக் கிடைத்த வெற்றிக் களிப்பில் கொற்றவைக்கு விழா எடுத்துள்ளனர். அவ்வாறு எடுக்கப்பட்ட விழாவில் தங்கள் இனத்தைச் சேர்ந்த சாலினி என்ற பெண்ணைக் கொற்றவையாக மாற்றி வழிபடுகின்றனர். இவ்வழிபாடு இனக்குழுச் சமுதாயத்தாரிடம் நிலவிய தாய்த் தெய்வ வழிபாட்டை நினைவுபடுத்துகின்றது. கொற்றவை வழிபாட்டில் தங்கள் இனத்தின் அடையாளச் சின்னங்களை அவளுக்குரிய ஆயுதங்களாகக் கொடுத்தனர். இவை அவர்தம் வாழ்வியலை எடுத்துரைக்கக் காணலாம். இவ்வழிபாட்டில் பாடப்படும் வரிப்பாடல் கூட்டு மந்திரமாக அமைகின்றது. கூட்டு வழிபாடு எல்லாவற்றையும் சாதிக்கும் என்ற நம்பிக்கையும் இதற்கு அடிப்படை. ஆநிரைக் கவரும் போரில் தாங்கள் பெற்ற வெற்றியினால் குருதிக் கொடையைக் கொற்றவைக்கு வழங்குகின்றனர். இஃது அதிதீவிரமான பக்தியுணர்வியின் வெளிப்பாடு. இவ்வாறு செய்வதனால் கொற்றவையின் அருட்பார்வை எயினரினத்தின் மீது விழும் என்பதால்தான் மேற்குறிப்பிட்ட சிலப்பதிகாரச் சான்றுகளை வைத்துப் பார்க்கும்போது, எயினர்கள் இனக்குழுவாகவே வாழ்ந்துள்ளனர். அவர்தம் பண்பாடு மற்ற நிலத்தாரிடமிருந்து வேறுபட்டுள்ளது என்பதையும் சிலப்பதிகாரம் வணிகக் குழுக்களின் எழுச்சியைப் பேசினாலும் இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்கள் சில காதைகளில் பதிவாகியுள்ளன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

## References

Maathaiyan, P. (2012) Sankakaala inakkulu Samutaayamum Aracu Uruvaakkamum, Paavai Publication, Chennai, India.

Samy, P.L. (2011) Tamil Ilakkiyattil Taaytteyva Valipatu, New Century Book House (P) ltd., Chennai, India.

Subramaṇiyan, S.V. (2009) Tolkaappiyam Telivurai, manivaacakar patippakam, Chennai, India.

Subramanyan, K. (2011) Cankakaalac camutaayam, New Century Book House (P) ltd., Chennai, India.

Subramanyan, N. (2017) Sangakala Valviyal, New Century Book House (P) ltd., Chennai, India.

Venkatacalam, (2007) Silappatikaaram, Paavai Publication, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License